# நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்



- **இயற்பெயர்**: வெ. இராமலிங்கனார்
- **பெற்றோர்** : வெங்கடராமன், அம்மணியம்மாள்
- **ஊர்** : நாமக்கல் மாவட்டம் மோகனூர்
- **காலம்** : அக்டோபர் 19, 1888 - ஆகஸ்ட் 24, 1972
- **சிறப்பு** : காந்தியக் கவிஞர், தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞர்,
- **பணி** : தமிழாசிரியர், கவிஞர்
- **நூல்கள்** : மலைக்கள்ளன், அவனும் அவளும், நாமக்கல் கவிஞர் பாடல்கள்
- 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'
- தமிழன் என்றோர் இனமுன்று<br>தனியே அதற்கோர் குணமுண்டு'
- 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'
- 'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்<br>கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

# எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்;

அதுவே தமிழன் குரலாகும்;

பொருள்பெறா யாரையும் புகழாது;

போற்றா தாரையும் இகழாது.

கொல்லா விரதம் குறியாக்

கொள்கை பொய்யா நெறியாக

எல்லா மனிதரும் இன்புறவே

என்றும் இசைத்திடும் அன்பறமே.

அன்பும் அறமும் ஊக்கிவிடும்;

அச்சம் என்பதையும் போக்கிவிடும்;

இன்பம் பொழிகிற வானொலியாம்;

எங்கள் தமிழெனும் தேன்மொழியே.